**தேதி :** 27.10.2025 **CC.No. :** 32/2022 PW :1 **மாரியப்பன்**

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரிகளுக்கும், எனக்கும் ஏற்கனவே குடும்ப பிரச்சனை, சொத்து பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. நான் புகார் மனுவில் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தண்ணீர் குழாய் என்னுடைய வீட்டிற்கு முன்னால் உள்ளது. அது பொது பைப் ஆகும். அந்த பைப்பில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தண்ணீர் பிடிப்பார்கள் என்றால் 2 வீட்டுக்காரர்கள் தண்ணீர் பிடிப்பார்கள். நான் இந்த விபரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேன். எனக்கு எழுதப் படிக்க தெரியுமா? என்றால் இல்லை. புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் போட்டேன். என்னை மருத்துவமனைக்கு கருப்பசாமி கொண்டு சேர்த்தார். அந்த விபரத்தை நான் போலீசாரிடம் சொல்லியுள்ளேன்.

இந்திரா, மாணிக்கம் ஊரில் தான் இருந்தார்கள். என்னுடைய மகன் எந்த ஊரில் வேலை பார்க்கிறார் என்று எனக்கு தெரியாது. எனக்கு விவசாய நிலம், தோட்டம் உள்ளது என்றால் சரியல்ல. எங்களுடைய ஊர் சின்ன ஊர் என்றால் சரியல்ல. நானும், என்னுடைய மனைவியும் இருசக்கரவாகனத்தில் விவசாய தோட்டத்திற்கு செல்லும் போது, நிலைதடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஒருபுறம் மட்டும் காயம் இருந்தது என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by
J CHRISTAL
BABITHA
Date: 2025.10.29
17:10:13 +0530

**தேதி :** 27.10.2025 **CC.No. :** 32/2022 PW :2 **பொன்னுத்தாய்**

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். எனக்கும், எனது கணவருக்கும் ஏற்பட்ட காயங்கள் ஒரு பக்கமாக ஏற்பட்டது என்றால் சரியல்ல. தண்ணீர் பைப் எங்கள் வீட்டிற்கு மேற்கே, சண்முக வீட்டிற்கு கிழக்கேயுள்ளது. தெரு பைப்பில் 6 நபர்களுக்கு மேல் தண்ணீர் பிடிப்பார்கள் என்றால் 5 வீட்டை சேர்ந்தவர்கள் ஒரு நாளைக்கு ஒரு வீடு என்று முறை வைத்து தண்ணீர் பிடிப்போம். இந்த விஷயத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேன். சம்பவத்தை அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பார்த்தார்கள். முதலில் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். 108 ஆம்புலன்ஸிற்கு கருப்பசாமி போன் செய்தார். அவர் தான் மருத்துவமனைக்கு எங்களை கூட்டிச் சென்றார். என்னுடைய மகன் கேரளாவில் வேலை பார்த்தார். அங்கேயே தங்கியிருந்து வேலை பார்ப்பார் என்றால் சரியல்ல. சம்பவநாள் எனது மகன் கேரளாவிலிருந்து வந்து கொண்டிருந்தார். அவர் நேரடியாக மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான். அவர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை, எங்களை அடித்து கீழே போட்டபிறகு தான் வந்துபார்த்தார்.

வாக்குமூலத்தில் எத்தனை கையெழுத்துக்கள் வாங்கினார் என்று எனக்கு சரியாக தெரியாது. நான் கையெழுத்து தான் போடுவேன். எனக்கு விவசாய நிலம், தோட்டம் உள்ளது என்றால் சரிதான். நான் பைக்கில் சென்றபோது, கீழே விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும்

நடைபெறவில்லை என்றாலும், முன் பகை காரணமாக பொய் புகார் கொடுத்து, பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இதே சம்பவத்தில் நாங்கள் எதிரிகளை தாக்கி காயம் ஏற்படுத்தியதாக சி.சி.எண்.172/2021 என்ற வழக்கு எங்கள் மீது போடப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் நாங்கள் எதிரிகளை எதுவும் செய்யவில்லை. ஏற்கனவே, வேறு இரண்டு வழக்குகள் சி.சி.எண்.354/2018, 109/2022 என வழக்குகள் தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் எங்கள் மீது எதிரிகள் புகார் கொடுத்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி, எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2025.10.29
17:10:20 +0530

**தேதி :** 27.10.2025 **CC.No. :** 32/2022 PW :4 குமார்

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் கேரளாவில் லாரி ஓட்டுகிறேன். ஒருநாள் விட்டு ஒரு நாள் வீட்டிற்கு வருவேன். எனக்கும், என் சித்தப்பாவிற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். உரிமையியல் வழக்குகள் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் கேரளாவில் இருந்தேன் என்றால் சரிதான். முத்தன் மகன் கருப்பசாமி எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். அவர் தகவல் சொன்னபிறகு தான் நான் மருத்துவமனை சென்றேன். சம்பவம் நடந்தபோது, நான் சம்பவயிடத்தில் இல்லை என்றால் சரிதான். என்னுடைய அப்பாவையும், அம்மாவையும் கருப்பசாமி தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மாணிக்கம், இந்திரா சம்பவநாள் வெளியூரில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. ஏற்கனவே, எங்களுக்கும், எதிரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லாததினால் என்னுடைய அப்பாவும், அம்மாவும் வாகனத்திலிருந்து கீழே விழுந்த காயத்தை பயன்படுத்தி, பொய் புகார் கொடுத்து புகார் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பால்ராஜ் என்பவர் எங்கள் ஊரில் தான் குடியிருந்து வருகிறார். என்னுடைய அப்பா, அம்மாவுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:10:27 +0530